**நகர்மன்றம்,**
**போடிநாயக்கனூர் ,நாள்.21.10.2022**

2022ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21.10.2022ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை :- திருமதி.ச.ராஜராஜேஸ்வரி,
நகர்மன்ற தலைவர்.

❖ **பொருள் எண்–1 :**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.92, நாள்.24.06.2022, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை எண்.93, நாள்.24.06.2022 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.358, நாள்.24.06.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.24470/2022/MA2, நாள்.08.08.2022 கடிதத்தில் நகராட்சி பகுதியில் வார்டு குழு மற்றும் பகுதி சபா அமைத்திடவும் மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்தும் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

அரசு உத்தரவின்படி போடிநாயக்கனூர் நகராட்சி பகுதியில் உள்ள 33 வார்டுகளில் வார்டு குழு மற்றும் பகுதி சபா அமைத்திட பிரிக்கப்பட்டுள்ள தெருக்களின் பட்டியல் மற்றும் எல்லைகளின் விவரப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு::**

1. அரசு உத்தரவின்படி தயார் செய்யப்பட்டுள்ள வார்டு குழு மற்றும் பகுதி சபா அமைத்திட பிரிக்கப்பட்டுள்ள தெருக்களின் பட்டியல் மற்றும் எல்லைகளின் விவரப்பட்டியலுக்கு மன்றம் பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட பட்டியலினை மாவட்ட அரசிதழில் வெளியிடவும் அதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

நக.எண். 2951/2022/எப்1

**தீர்மான எண் :** 155– அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(ஒம்) திருமதி.ச.ராஜராஜேஸ்வரி
நகர்மன்ற தலைவர்

// உண்மைநகல் //

ஆணையாளர்(கூ.பொ)
போடிநாயக்கனூர் நகராட்சி